2018 ஜூன் 8] [திரு. டி. ஜெயக்குமார்]

அம்மா அவர்களின் அரசைப் பொறுத்தவரை, திருக்குறள் போல. எந்த ஒரு திட்டத்திற்கும் மக்கள் ஆதரவு இருந்தால் நிச்சயமாக அரசினுடைய ஆதரவு இருக்கும்; எந்த ஒரு திட்டத்திற்கும் மக்கள் ஆதரவு இல்லையென்றால் அம்மா அவர்கள் அரசின் ஆதரவு இருக்காது. இதுதான் அரசின் நிலை. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-20

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகளை எடுத்துக்கொள்வது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இந்த மன்றத்தினுடைய உறுப்பினர்கள் Call Attention, Adjournment Motions-க்காக அரசாங்கத்தினுடைய கவனத்தை ஈர்க்கலாம் என்று பேரவை விதிகள் 55 மற்றும் 56-ஐ சட்டமன்றத்தில் ஏற்படுத்தியிருக்கிறார்கள். நான் இந்தக் கூட்டத்தொடரில் பார்க்கிறேன், நீங்கள் இதுவரையில் இரண்டுதான் எடுத்திருக்கிறீர்கள். இன்னும் இருப்பது 14 நாட்கள்தான். எங்களது கட்சியின் சார்பாக மட்டும் கிட்டத்தட்ட 50-க்கும்மேற்பட்ட அறிவிப்புகளைக் கொடுத்திருக்கிறார்கள். ஓர் உறுப்பினருக்கு Call Attention, Adjournment Motions-ல் பேச வாய்ப்பு அளிக்கப்பட்டால் சில விஷயங்களில், நேரடியாக அரசின் கவனத்தை ஈர்த்து, பதில் சொல்ல வைக்கமுடியும். எனவே, அதை நீங்கள் எடுக்காமல் இருப்பது நல்லதல்ல என்று நான் கருதுகிறேன். திங்கட்கிழமை முதல் ஒரு நாளைக்கு இரண்டு என்ற வீதத்தில் எடுங்கள் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பேசிய பிறகு பதில் சொல்லலாம் என இருந்தேன். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொல்வது, மாண்புமிகு உறுப்பினர்கள் பேரவை விதிகள் 55 மற்றும் 56-ன்படி என்னிடம் அறிவிப்புகள் கொடுக்கிறார்கள். அதை நான் சம்பந்தப்பட்ட துறைகளின் பதிலுக்காக அனுப்பி வைத்திருக்கிறேன். சம்பந்தப்பட்ட துறைகளிடமிருந்து விரைவில் பதில்களை அனுப்ப மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும், துறைச் செயலாளர்களையும் தனியாக

அழைத்து நான் கூட்டம்கூட நடத்தியிருக்கிறேன். எனவே, நானும் பதிலைக் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறேன். துறைகளிடமிருந்து பதில்கள் விரைவாக வருவதற்கு நான் ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறேன். நான் ஏற்கெனவே இரண்டு கவன ஈர்ப்புகள் எடுத்திருக்கிறேன். அப்படிக் கவன ஈர்ப்பு எடுத்துக்கொள்ளாத நாட்களில் மாண்புமிகு உறுப்பினர்கள் அரசின் கவனத்தை ஈர்க்க வேண்டுமென்று ஏதாவது சொன்னால், நான் அதை மறுக்காமல், தகவல் கோரல் என்ற முறையிலே அவர்களுக்கு அனுமதி அளித்து பேச வாய்ப்பளித்திருக்கிறேன்.

இன்றைக்கு காலையிலேகூட மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள் பேரவை விதி 55-ன்கீழ் அறிவிப்பு கொடுத்திருக்கிறார். அவர் மிகவும் வற்புறுத்திக் கேட்டதனாலே, இன்றைக்கு நான் அதை அனுமதித்தேன். அதற்கு மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள்.

அதேபோன்று, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள் கேட்டபோதுகூட, நான் அனுமதி அளித்திருக்கிறேன். திரு. அர. சக்கரபாணி அவர்கள் கேட்டும், நான் அனுமதி அளித்திருக்கிறேன். திரு. உ. மதிவாணன் அவர்கள் கேட்டும், நான் அனுமதி அளித்திருக்கிறேன். இப்போது, திரு. சேகர்பாபு அவர்கள் ஒரு தகவல் கேட்கிறார். அதற்கு மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லஇருக்கிறார். அவரும் பேரவை விதி 55-ன் கீழ்தான் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்களைத் திருப்திபடுத்த வேண்டுமென்று தாங்கள் பெருந்தன்மையோடு பேச வாய்ப்பளிக்கிறீர்கள். ஆனால், Agenda -வில் அது சேர்க்கப்பட வேண்டும் என்பது முக்கியமான ஒன்று. ஆனாலும், நான் நீங்கள் சொல்வதை ஒத்துக்கொள்கிறேன். Department ரொம்ப lethargic ஆகத்தான் இருப்பார்கள். அப்படி இருந்ததால், முன்னாள் சபாநாயகர் திரு. பழனிவேல் ராஜன் அவர்கள் என்ன செய்தார்கள் என்றால், “இப்படி நீங்கள் இருந்தீர்கள் என்றால் நான் சபைக்கு அழைக்கவேண்டியிருக்கும்” என்று கண்டித்துச் சொன்னார். உங்களுக்கு கனிவும் உண்டு சார், அதிகாரம் பண்ணும் திறமையும் உண்டு சார். இதைக் கண்டிப்பாகச் சொல்லுங்கள் சார்.

2018 ஜுன் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொல்வதை நான் உறுதியாக ஏற்றுக்கொள்கிறேன். நான் அதையெல்லாம் செய்வதற்குத் தயாராகத்தான் இருக்கிறேன். இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், முடிந்தவரை, பதில் வந்தால் அதை* Agenda-*வில் சேர்த்து, மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கையை நிறைவேற்ற வழி செய்ய வேண்டும் என்று நினைக்கின்றவன் நான். ஆனால், சில நேரங்களில், துறைகளிடமிருந்து பதில் வருவதற்கு முன்னரே, அவையின் கவனத்தை ஈர்க்க அவர்களுக்குப் பேச வாய்ப்பளிக்கிறேன். முடிந்தவரை இதை* Agenda-*விலே கொண்டுவருவதற்கும், துறையின் மாண்புமிகு அமைச்சர்களுக்கும், அரசுச் செயலாளர்களுக்கும் நான் உரிய அறிவுரைகளை வழங்குகிறேன். நிச்சயமாக அது நடக்கும் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு, என்னவென்று சொல்லுங்கள். நீங்கள் பேரவை விதி 55-ன்கீழ்தான் அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். இன்று காலையில் நீங்கள் என்னை மிகவும் வற்புறுத்தினீர்கள். நீங்கள் பேசிய பின்னர், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களைப் பதில் சொல்லச் சொல்கிறேன்.

(இ) சென்னை, கந்தப்பச்செட்டித் தெருவில் மின் பழுது நீக்கும்போது உயிரிழந்த மின் வாரிய ஊழியர் திரு. பழனி என்பவருக்கு நிவாரணத்தை உயர்த்தி வழங்கக் கோருதல்

***திரு. பி.கே. சேகர்பாபு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கந்தப்பச்செட்டித் தெருவில் ஏற்பட்ட மின் பழுதை நீக்குகின்றபோது, மின்* Lineman *திரு. பழனி அவர்கள் மின்சாரம் தாக்கி உயிரிழந்திருக்கிறார். அந்த இடத்தில்* Earth rod *அமைக்கப்படாத நிலையில், அந்தப் பழுதைப் பார்த்ததால், மரணம் ஏற்பட்டிருக்கிறது.* Earth rod *என்பது எமனையும் வெல்லக்கூடியது. வெளிச்சத்தைத் தரவேண்டிய முயற்சியில் ஈடுபட்ட அந்த மின் ஊழியரின் குடும்பம் இன்று இருளில் தள்ளப்பட்டிருக்கிறது. அவருக்கு பொம்மி என்ற மனைவியும், சாலினி, திவ்யா என்ற இரண்டு மகள்களும் இருக்கின்றார்கள். ஒரு பெண், கல்லூரியில் இரண்டாம் ஆண்டு கணிதவியல் படித்துக்கொண்டிருக்கிறார். இன்னொரு பெண், +1 படித்துக்கொண்டிருக்கிறார். இப்படி மின் ஊழியர்கள் இறக்கும்போது ஈமச்சடங்கிற்கு ரூ.5,000/-தான் தருகிறார்கள்.*